1978 செப்டம்பர் 2]

மிலட்டூர் நகரப் பஞ்சாயத்து

*வினா எண் 47—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த மிலட்டூர் நகர பஞ்சாயத்தை இரண்டாக பிரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. அ. செல்லப்பா: அந்த நகரப் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கும்போது வட்டார மக்களிடமிருந்து கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படிப்பட்ட கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கும் வரவில்லை; ஊராக வளர்ச்சி இயக்குநருக்கும் வரவில்லை; மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வரவில்லை; கோட்ட வளர்ச்சி அலுவலருக்கும் வரவில்லை.

(மணி அடிக்கப்பட்டு கேள்வி எண் 48 எடுத்துக் கொள்ளப் பெற்றது).

நடுவட்டம் பேரூராட்சியில் சினிமா திரை அரங்கம்

*வினா எண் 48—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்ந்த நடுவட்டம் பேரூராட்சி மன்றம் ஒரு சினிமா தியேட்டர் கட்ட அனுமதி கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (ஆ): ஆம். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி கோரியுள்ளது, அவர் அச்செயற்குறிப்பின் மேல் சில கூடுதல் விவரங்கள் கேட்டு நடுவட்டம் நிர்வாக அலுவலருக்கு திருப்பி அனுப்பியிருக்கிறார்.